பிஸ்மில்லாஹி.

# தோத்திரமஞ்சரி.

இஃது

பிறையாறு

மூ. வெ. அப்துல் அஜீஜ் மரைக்காயரால்

இயற்றப்பட்டு,

தெப்பந்தங்கி கப்பித்தராகிய

பிறையாறு

மகா-ா-ா-ஸ்ரீ கா. ம. பெரியதம்பி அவர்களால்

சிதம்பரம்,

ஸ்ரீ குஞ்சிதசரண அச்சுக்கூடத்தில்

அச்சிடப்பட்டது.

29—1—1919.

Q7:417
N19
183493.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

மஹ்மூதுபந்தர்

பறங்கிப்பேட்டை பாவகைவல்ல மஹாவித்துவான்

ஸ்ரீமத் கவு. காதிறசனுமரைக்காயரவர்கள் இயற்றிய

கட்டளைக்கலிப்பா.

சீர்குதிக்கு மெழின்மணி மாடமே திகழ்குதிக்கும் பிறையாயெனும்பதி
ஏர்குதிக்கும் விளங்கொலி மார்பதா மிசைகுதிக்கும் புகழ்ப்பலகுடினன்
பேர்குதிக்கும் வெள்ளைமரைக்காயரின் பேசுமெய்தவமோருருக்கொண்டெ
பார்குதித்தெழு மப்துலஜீஜெனும் பாவலர்க்கெதிர் நாவலரேறரே. [ன

646
1'19

இஃது

நாகூர்

ஸ்ரீமத் மு. ஆ. முகியித்தீனப்துல்காதிறுப்புலவரவர்கள்

இயற்றியது.

சீரிருக்குந் தவத்தினிறை யாயுலகை வெறுத்திறையைத்தெரிவான்வேண்டி
பேரிருக்கு மவுனநிலை சான்றுசுயம் பிரகாசப் பிரமையாகி
காரிருக்கு முலகுநசை யொழித்துசுகா தீதமதிற் கலந்தானந்த
நேரிருக்குங் குணந்தழுவிச் சாகுமுனஞ் சாப்பதவி நிலைத்தமேலோர்.

திருமணக்கும் பிறைசைநகர் மஆதுலெப்பை யாலிமெனச் சேலங்காக்குங்
குருமணக்கு மஷாயிகெனச் சின்னலெப்பையாலிமெனக் குலவாநின்றக்
கருமணக்கு மிவ்வரிய மூவடிக டங்களடிக் கமலம் போற்றி
மருமணக்குந் தமிழ்விருத்தப் பாவினத்தாற் சாற்றுகநா வல்லோ யென்ன.

மதிகிளரு மன்பர்குழா முவந்ததிகந் தூண்டிநிற்க வாணர்மெச்ச
விதிகிளருங் கற்பனைசீ ரடிதொடைசொற் பொருணயமும் வியக்கநாளுந்
துதிகிளரு மதுரமொடு தோத்திரமஞ் சரியெனும்பேர் துலங்கச்சூட்டி
நிதிகிளரும் படியளித்தப் புலவனையிங் கனமெடுத்து நிகழ்த்தக்கேண்மின்.

அகத்தியந்தொல் காப்பியமுன் னயபல விலக்கணமு மதனோடுற்றச்
செகத்தியற்பல் விலக்கியமு மதநூலு மையமறத் தேர்ந்திங் கார்க்கு
மிகத்திறமு நாவலியுங் கவிநயமும் பிரசங்க மிகைப்புஞ்சால
மகத்துவமும் பெறுமுசிதன் வெள்ளைமரைக் காயர்தவ மைந்த னானோன்.

தனநிறைந்த திருமதுரைத் தமிழ்ச்சங்கப் புலவர்களிற் றகுதிவாய்ந்த
வினநிறைந்த முத்துத்தாண்டவராயப்பிள்ளையெனு மியல் வல்லோன்றம்
மனநிறைந்த வன்புடைய மாணாக்கரெவரினுஞ்சீர் மலியுஞ் செல்வன்
கனநிறைந்த பிறைசையில்வா ழப்துலஜீஜ் மரைக்காயக் கவிச்சிங்கேறே.

இஃது

**மஹ்றூதுபந்தர்**

பறங்கிப்பேட்டை வித்துவான் காதிறலிமரைக்காயர் குமாரரும்
கவிச்சாகரம் செய்குநயினுமரைக்காயர் சகோதரருமாகிய

## ஸ்ரீமத் முகம்மதப்துல்காதிறுமரைக்காயரவர்கள்

இயற்றியது.

மாமணக்குங் கலைஞர்புகழ்ப் பிறையாற் றின்சீர்
வலிமார்க டோத்திர மஞ்சரி செய்தானுல்
பூமணக்கும் வெள்ளைமரைக்காயர் செய்த
புனிததவ மணியாக வுதித்த மைந்தன்
றாமணக்கும் முத்தமிழ்வா ருதிநீருண்டு
சொன்னன்கு கவிமாரி பொழியு மேகம்
பாமணக்கு மப்துலஜீஜ் மரைக்கானென்னும்
பகரரிய நாவலர்கள் துதிக்குங்கோவே.

இஃது

**நாகூர்**

சித்திரகவிநாவலர்

## ஸ்ரீ. மு. ஆ. சுல்தான்மரைக்காயரவர்கள்,

இயற்றியது.

சகமவிருன் னதபுனித நம்மொலிசு ளனப்பிறைசை தன்னில்வாழ்வித்
தகமவிரு மஆதுலெப்பை யாலிமொலி வள்ளல்பெருந் தகையும்ஞான
சுகமவிருங் குணக்குரில் சேலநகர் மஷாயிகொலி தோமிற்சீரும்
பகமவிருஞ் சின்னலெப்பை யாலிமொலி யுல்லாதம் பண்புந்தோன்ற
அத்துவித முடன்கலந்து பரனடைந்த மூவரிவ ரருங்கண்ணேக்க
மத்தனையும் பெற்றுநல மத்தனையும் படைத்துயவிங் கறிவான் மெய்க்க
சித்தமதி லுறுதியொடு களிப்பினொடு வினிமையொடு சிறப்பும் பூப்பப்
புத்தமுத நறுந்தமிழாற் ஸ்தோத்திரமஞ் சரியையிவட் புனைந்திட்டானுல்
நினையவருமியற்புலவனெவனெனின்மாப்பிறைசையிற்சீர்நிலவிவாழ்வோன்
கனையகட லெனுங்கல்விக் கரைக்கண்டோன் சன்மார்க்கங் கருணைசீர்த்தி
யனையதவ மொழுக்கநெறி பொறைவாய்மை யருளாக்க மமைந்த நீரான் [ன்
றனையடுத்தோர் பொனையடுத்தாற்போலாக்கு நன்னேக்கந்தழைத்தமேலோ.
பூமணக்கும் புலவர்கண மிறும்பூத நயமுதிரப் புனிதந்தோய
பாமணக்கும் பிரபந்த வகையுமுதுஞ் சணத்தினிற்சொற் பண்புமிக்கோன்
காமணக்குங் கரத்தழகன் வெள்ளைமரைக்காயரிரு கண்ணேர் மைந்தன்
மாமணக்கும் விசுவாசனப்துலஜீஜ் மரைக்காய மதிவல்லோனே.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

இந்நூலாசிரியர் போதகாசிரியரும்
மதுரைத் தமிழ்ச்சங்கப்புலவருள் ஒருவருமாகிய
பறங்கிப்பேட்டை

## ஸ்ரீமத் ப. அ. முத்துத்தாண்டவராயபிள்ளை,

அவர்களியற்றியது

**கட்டளைக்கலித்துறை.**

திருக்கண்ட மெய்ப்புல வோர்துதி செப்பச் செழுங்கதிரி
லுருக்கண்ட வான்பிறை யாற்றமர் மூவருவக்கு மொழி
தருக்கண்ட முத்தமிழ் மாலையுவப்புறச் சாற்றினனால்
மருக்கண்ட தாரனபுதுல் லஜீஜெனு மாணவனே.

இஃது

பிறையாறு பஞ்சாயத்து

## ஸ்ரீமாந் மு. முகம்மதுகாசிம்மரைக்காயர்

அவர்களியற்றியது.

சீரலர்பிறைசை சேலமிந் நகர்வாழ்
செப்புமெய்ஞ் ஞானதே சிகராம்
பேரலர் நலநம் மூவர்தங் கருணைப்
பெறவரு தோத்திர மஞ்சரியை
நேரல ரமர ரமுதினும் வியப்பாய்
நிலவவிங் களித்தனன் செழித்த
ஆரலர்திறத்தோ னெற்குமோ ரன்ப
னப்துல ஜீஜவன் மாதோ.

இஃது

பிறையாறு

## ஸ்ரீ மு. செ. சுல்தானப்துல்காதிறியற்றியது.

விருந்தி லாமனை யிருந்திலாரென
விளம்புவள்ளலர் கொழும்புகழ் பிறையாற்றிலே
அருந்தவத்தினில் சிறந்த முத்திகை
யாண்டமூன்றுெலி தோன்றலென்றெழு மன்பர்மேல்
திருந்துமஞ்சரி பெருந்த மிழ்முனி
தியங்குமின் சொலினயங்கடங்கிடு தேவர்கை
மருந்தினும்மிது பொருந்த வைத்தனன்
மன்னுகூடலி னென்றஜீஜெனும் வாணனே.

இஃது

பிறையாறு

## ஸ்ரீமத் நா. பெ. இராமச்சந்திர கவிராயர்

அவர்களியற்றிய

### அறுசீர்கழிநெடிலடியாசிரிய விருத்தம்.

மாலோகந் தவிராதவனை கடலைப்புடவை யெனமருங்கில் வாய்ந்த
பூலோக முழுமையுநற் புகழ்படைத்து மறைக்கடலிற் புகுந்துமூழ்கி
மாலோக ரெவருமிவ ரறிவரிய மாதவரென்ற கத்துளாரச்
சாலோக முதலாய நற்பதமு முயிர்க்களிக்குந் தன்மையோர்கள்.

விற்பனத்தி லுயர்ந்தவரு மோலியத்திற் குயிர்கொடுத்து மிளிர்வேதாந்த
பொற்பனந்த முற்றவரும் வேதபோ தகருமெனப் புகழ்மெய்ஞ்ஞான
நற்புனித மூவர்களாம் திருப்பிறை சைசேலமிரு நகர்வாய்வாழு
மற்புதவிம்ம ஆதுலெப்பை மஷாயிகொலி சின்னலெப்பை யாலீம்பேரில்

சொன்னயமும் பொருணயமுந் தொடைநயமு நடைநயமுந் துறையினுதி
யின்னயமு நயமுறமன் னிசைநயமு மலியயிவ ணெடுத்துச்சொல்ல
வெந்நயமு மொருங்குடைய தெனவறிஞ ரிறும்பூதுற் றினிதுகூறப்
பன்னயமுங் காண்குற நற்பத்திநயமுற்றிடு தோத்திரப்பாச் சொற்றான்.

கொத்துத்தாழ் வடம்புனைந்திட் டாகமநூல் விதிப்படிக்குக் குலவித்தன்னை
யொத்துத்தாழ் பவர்கட மக்கருங்கலைபி னுபதேச முனுற்றிநாளும்
சித்துத்தாண் டவம்புரியுந் திருப்பரமன் றிருவடியைத் தினமும்போற்று
முத்துத்தாண் டவராயன் பதமலரைத் தொழுதுதமிழ்முறையிற் கற்றோன்

பொறையாற்று மனுநெறியின் முறைவழுவா தமர்ந்தமிகக் குளிர்நீர்ப்பொ
ன்னி[ன்னி]றையாற்று நிதிவளமு மறநெறியு மெந்நாளு நீடித்தோங்கிக்
குறையாற்றும் படிச்சேவற் குயிற்கொடையோ னக்கொடிமா விருந்துகூ
பிறையாற்று வாழ்பவனு மப்துலஜீ ஜனும் பெயர்கொள் புலவரேறே [வு

## இத்தோத்திரமஞ்சரியை' அச்சிட்டரங்கேற்றுவித்தவர்

### இன்னாரெனப்பாடிய

## ஆசிரிய விருத்தம்.

திருமேவு மொருபரம னருண்மேவு மொலிகளாய்ச்
  சேணிலம் வியக்க மிக்க
சீரதி லுயர்ந்து பிறையாறதி லமர்ந்து புகழ்
  சேர் ஜெயினுத்தீ னரசோடு
மருமேவு பொழில்சூழு மெழில்சேல நகர்மேவு
  மதிமஷா யிகுசா ஹிபை
மன்னு மென்னகர் சின்ன லெப்பையாலிம்பெரு
  மானையுமு வந்தோ தெமர்
குருமேவு தோத்திரக் கவியரு மையைக் கண்டு
  கூறந்த வொலிமா மருட
குலவவச் சிட்டரங் கேற்றுமிங் ஙனமீந்த
  குணவாள னவனா ரெனிற்
தருமேவு காரனதிக தனமேவு திறன்றெப்பந்
  தங்கிகப் பித்தா னெனச்
சாற்றுமறி ஞன்பிறை யாற்றதிப னெம்பெரிய
  தம்பிபெறு மபி தானனே.

பிஸ்மில்லாஹி.

# தோத்திரமஞ்சரி.

காப்பு—வெண்பா.

பொற்பிறை சைச்சேலம் புரந்தருளுமெய்ஞ்ஞான
நற்புனித மூவரின்சீர் நானனேத்து—விற்பனர்முன்
வாசிக்க நல்ல வரந்தருமே எவ்வுயிரும்
பூசிக்கு மெய்ப்பொருளிப் போது.

நபிகணாயகர்.

மாவதியுந் தீந்தமிழான் மன்னுமிரு டியரான
மூவரிவர் தோண்மலைக்கோர் முதுமொழிமா லைசொலத்
தாவறுசீ ரன்புபொறை தனிஞானஞ் சித்திமுத்தி
ஈவதயு ராவிறசூ லிணையடிக டுணையெமக்கே

குத்புனாயகர்.

மீப்புக ழரிஞ ரானோர் மெய்ந்நிலை யுணர்ந்தோர் ஞான
மூப்புறுந் தவத்தோ ராயிம் மூவர்செந் தமிழ்மா லைக்குக்
காப்புறுங் கருணை நல்குங் கதிதரு முகியித் தீனுஞ்
சேப்புறுங் குத்பெங்கோமான் சேவடி சிறப்ப மன்னோ.

ஆரிபுநாயகர்.

நேரிய லீங்கிசை நீடிய மூவர்
பேரில வாக்கொடு பேசவி சேஷ
சீரிய வற்புதச் செய்சுலு தானு
வாரிபு தாண்மல ரன்பொடு தாழ்வாம்.

ஒலிகணாயகர்.

துளங்குசீர் மூவ ரன்னோர் தோத்திரக் கவிதைபாட
உளங்குளிர் நாவிங் கன்பா யுதவிகாத் தாளுநாளும்
விளங்கிய லறிவுஞ்செல்வ மிகுநலச்சிறப்புஞ்சீரும்
வளங்கிளர் நாகைஷாஹுல் ஹமீதொலி மலர்த்தாளன்றே.

## ஞானாசிரியர்,

உய்யவருண் மூவரவ ரொண்புகழுரைக்கு
மையமற வெற்கியலி னம்முறையளிக்கும்
துய்யபகு தாரதிபர் தொன்னபிதம் வம்சர்
செம்பிது முகம்மதுற சீதுபதமன்றே.

## தமிழாசிரியர்.

மாண்டவ ராதமு வள்ளலைப் பாட
வீண்டவ ராவெண வெற்குரை சொற்ற
பூண்டவ ராதிப னும்புகழ் முந்துத்
தாண்டவ ராயமா சற்குரு தாழ்வாம்.

## ஆக்கியோன் பெயர்.

விண்ணமைத் தீண்டட விப்புடைசூழும் வியன்பிறைசை
கண்ணமைத் தீண்டல வள்ளல் வெள்ளைமரைக்காயர்தவ
தண்ணமைத்திரத் தமிழ்வாணர்தங்கள் தலைவனென்னும்
ண்ணமைத் தீஞ்சொலி னப்துலஜிஜு நற்பாவலனே

## அவையடக்கம்.

அவைகுணிக்கு மருங்கவிவல்லர் சேர்
குவையி லென்கவி கூடிநிகழ்வது
சுவைகனிந்தஞ் சுகஞ்சொ றீஞ்சொல்லினோர்
கவைக ருங்கொடி கத்துத லொப்பரோ.

ந்தை யென்னநல் லுவப்பின ருந்தவ ரெவர்க்கும்
விந்தை யற்புத வித்தகை மூவர்தம் விரும்பாற்
ந்தை கூர்ந்திவ ணியம்பினன் கவிதையிசெகத்தோர்
ந்தை கூறினு மதையொரு பொருட்டென நினையேன்.

# நூல்.

## கலறத்து மகுஆதுலெப்பை ஆலிம் ஒலியுல்லா அவர்பேரில்

# தோத்திரப்பா.

மதிகதிர்தா ரகைவான மறுசுருறு சுச்சுவன மலைபாதாள
நிதியுவரி புடவிமனு ஜின்னுயிர்மற் றெவையுமொரு நெறியாக்கீங்காத்
துதிகிளிர்கும் மக்கநகர் பெருமான்றன் றிருவொளியாற் றுலக்கியபாலோ
ரதிபனருள் பெறுமொலியே ஆதுலெப்பை யாலிமெனு மன்புள்ளீரே.

பொற்புறுநற் றவசிதியே புதுஞானக் கனிரசமே புனிதமார்ந்த
விற்பனர்க ளணிமுடியே விள்ளரிய தெள்ளமுதே மிகுநற்சோதி
யுற்றநவ ரத்தினமே யோங்கியமா மலையெனச்சீ ருறையும்பூவே
அற்புதவா ருதியேயெம் மாருயிரே ஐயினுத்தீ னுமென்பீரே.

சீர்பூத்த பாவெளியி லுலவிநலங் கலந்துரிமைத் திறமைபூத்த
பேர்பூத்த துறவிகளிங் குறவினெனும் பாவநெறி பெரிதும்பூத்த
நேர்பூத்த பிறைசையிலற் புதநயவிற் பனமகிமை நிறையப்பூத்த
வர்பூத்த கழனிழல்தங் தாளுதிரெம் மகுஆதுலெப்பை யெனும்வல்லீரே.

கவிக்குவன முதிர்மதிணத்திறை மறைப்பாகதும் ஞானக்கடலு மாந்தித்
தவிக்குமுயிர் பயிர்தழையக் கருணைமழை பொழிந்தேதற் காத்துநிற்பீர்
புவிக்குளுய ரற்புதநும் மடிக்கடிமை யியம்பிமேப் புன்பாவெல்லாஞ்
செவிக்குளிரக் கேட்டருள்வீர் மகுஆதுலெப்பை யாலிமெனுந் திருவுள்ளீரே

இகங்காட்டுங் கொடும்பாச விடாவினைத்துங் களைந்துநீமிர்ந் திசைபெற்றோர்க்கு
பகங்காட்டு மருந்தவநும் பெருங்கருணை முகங்காட்டிப் பரிவாய்காளு [ம்
மகங்காட்டுஞ் செயலறவித் தங்காட்டி யிடரோட்டி யருண்மெய்ஞ்ஞானச்
சுகங்காட்டு விப்பதென்றோ மகுஆதுலெப்பை யாலிமெனுந் துதியுள்ளீரே.

ஈங்கலகை யிடர்மிடிநோ யிணங்களுமை வணங்குவர்மாட் டிணங்கேமென்ன
நீங்குவது நலமுசித நிலவுவதுங் குலவுவது நிகரிற்கீர்த்தி
யோங்குவதுங் கணித்தகிலந் தாங்குவதும் விழித்தடிமை யோதற்காமோ
தேங்குலவு மலர்ப்பதத்தீர் மகுஆதுலெப்பை யாலிமெனுஞ் செயமுள்ளீரே.

நறைமதிக்கும் வலியுடைய ஜின்கள்பலப் பணிபுரியத் தனிமெய்ஞ்ஞானத்
துறைமதிக்கு மறிஞர்குழாங் கொண்டாட நவநிதங்க டலங்கநளும்
மறைமதிக்குந் தவ்கீது வழியதிக்கு மாலிமென மதிக்கவாழு
மிறைமதிக்கும் மதிப்புடைய மஆதுலெப்பை யாலிமெனு மெழிலுள்ளீரே.

பொருட்குடைத்து வியனுறுத்தல் புவிக்குடைத்து மருட்டுவித்தல்புகழ்மெ
[ய்ஞ்ஞானத்
தெருட்சுடைத்துமதிவிளைத்தல்திரைக்குடைத்துவெலிகிளர்த்தல்தேவநுந்த
னருட்குடைத்துகதியளித்தலெனமதித்துதுதித்திடுமிவ்வடியேனுய்யச்
செருக்குடைத்தாண்டருள்புரிவீர் மஆதுலெப்பையாலிமெனுந்திறமுள்ளீரே

ஆபுங்கா லிவண்மனைவி மக்கண்முத லாம்பொருள்க ளனைத்துமாவி
மாயுங்கா லகலுநும தருளகலா துதவுமெனமதித்து வேண்டுஞ்
சேயிக்கா தரம்பெறநல் லருலருளி மெய்ப்போத தீட்சைநல்கித்
தாயினுங்காத் தாதரிப்பீர் மஆதுலெப்பை யாலிமெனுந் தவவுள்ளீரே.

மாடத்தங் கன்றிலுறப் பிணைவரைந்தன் றுயிரளித்து மதிதவ்ஹீது
பாடலள விலகவலிர் நம்பியர்க்கோர் தம்பியெனப்ப ழிச்சவந்து
நாடறியக் கிடக்குநும சற்புதத்தின் பெருக்கதனை நவிலற்பாற்றோ
தேடருமா தவக்களிறே மஆதுலெப்பை யாலிமெனுந் தெருள்வல்லீரே.

திறத்தாலு மமரர்தொழுஞ் சிறப்பாலு மெய்ஞ்ஞானச் செல்வத்தாலுங்
குறத்தாலுங்கிளரொலியெம்சின்னலெப்பையாலிமிவர்குலத்தாலுஞ்சொல்
லறத்தாலுங் கனமுயரற்புதத்தாலுந் தவத்தாலு மன்பினாலு
நிறத்தாலுந் திகழரசே மஆதுலெப்பை யாலிமெனு நிதியுள்ளீரே.

மைப்படி கண்ணியர்காமக் கண்ணிவயின் சிக்கியகமருண்டடந் தோபொய்
மைப்படிகட் காவமுத லேனையதீ மைச்சிறிதும் வதியாநன்னேர்
மைப்படியிங் கறிவறிந்து சன்மார்க்க வழியொழுகி வலியாருஞ்சீர்
மைப்படிக்கு முறையறைவீர் மஆதுலெப்பை யாலிமெனு மதிவல்லீரே.

அலந்தருளும் மலநூறி விழுமியநாற் குணமருவி யறிவதாய்ந்தைம்
புலம்வென்றுட் பகைமாறும் புடைத்துபா தகமேழும் புறம்பேதள்ளி
பொலன்றவநல் லூறுப்பெட்டு மிரதமொன் பதும்விரதம் பூண்யத்துர்ந்தேர்ந்
திலகுதவத் தோர்க்கிறைவே மஆதுலெப்பை யாலிமெனு மியல்வல்லீரே.

தாயிழந்த மதலையெனச் சலமிழந்த மீனமெனத் தனல்வாய்ப்பட்டுத்
தீயுறு மலரென்னத் திகைப்புறுமென் றிகப்பொழித்துத் திருக்கண்பார்த்து
கோயிலம்பா டிடரணு காதாதரித்து பவமனைத்து நொடிக்கு ளீர்ப்பீர்
மாயிருநற் குணக்கடலே மஆதுலெப்பை யாலிமெனு மதிப்புள்ளீரே.

பழமறைதன் னருந்தேற லினிதினொடு தங்கீதம்பழச் சாறிட்டே
குழத்தவக மியவமுதப் பிழம்பிஃதென் றறிஞர்களிக் கொண்டுட்கொள்க
விழுமியநற் குறவஞ்சி யெனும்பனுவ லிசைத்தெவனும் வியக்கத் தந்தோங்
கெழிலுலவு செழுமுகிலே மஆதுலெப்பை யாலிமெனு மிசையுள்ளீரே.

மருடருமிப் புவனமோடஞ் சுவணவண மாதரையுமதித் தஞ்ஞான
விருடருபுன் னெறிநுழைந்திங் குழலாதுங் கழநீ கமலமிறைஞ் சிவாழகத்
தெருடருவிற் பனமருளிக் கனமருளித் தனமருளித் தினமெய்ஞ்ஞான
வருடருவீ ரினிதொடுமெம் மஆதுலெப்பை யாலிமெனு மறமுள்ளீரே.

அன்னையினு மன்புடையீ ரடியர்மிடித் துடைத்தருள்வீ ரமரரேத்தும்,
பொன்னனைய ருஞ்சரணஞ் சரணமென விறைஞ்சி துதிபுகலா நிற்கு [தோ
மென்னையினந் தாள்வதற்கிங் கெதுதடையோ மனமிலையோயிம்பொன்னு
பின்னையெமக் கார்துணையோ மஆதுலெப்பை யாலிமெனும் பெட்புள்ளீரே

வளஞ்சினையா வெழின்மீசு னகரறிஞர்க் கறிஞரென மதிப்பார்வண்ணக்
களஞ்சியரஞ் சிதவினிய கவிரசம்பாய்ந் தலர்ந்தசெவிக் களிப்பான்மிக்க
உளஞ்சிறந்தன் றருளளித்த நும்முன்னையொப்பவெற்கிங்குதவல்வேண்டும்
குளஞ்சிந்து நனமொழியீர் மஆதுலெப்பை யாலிமெனுங் குருவல்லீரே.

கதியளிப்பீ ருவப்பவர்க்குக் கசடறுப்பீர் தொழுபவர்க்குக் கனிவாய்மிக்க
மதியளிப்பீர் துதிப்பவர்க்கு வரங்கொடுப்பீ ரிரப்பவர்க்குவளர்மெய்ஞ்ஞான
நிதியளிப்பீ ரடியவர்க்கென்றொருமொழிகேட்டிறைஞ்செமையு நினைந்தொ
[ராண்சந்
தியளிப்பீரன்பொடுநன் மஆதுலெம்மையாலிமெனுந்தயையுள்ளீரே

மெய்யாண்ட முதியநுந்தங் கையாண்ட குக்குடத்தை விருப்பாற்பற்றி
சய்யாண்ட விக்கரத்தை யாண்டோர்முன் சமைத்தசெயல் கேட்டன்றே
வெய்யாண்ட வதைமீட்டி யுயிரூட்டிக் காட்டியிவ ணிதழுமாறு
தையாண்ட வற்புதவெம் மஆதுலெப்பை யாலிமெனு மருமுள்ளீரே.

மின்னிலுயர்ந் ததுபருதி மீனிலுயர்ந் ததுமகரம் மிளிர்மாற் றோங்கும்
பொன்னிலுயர்ந் ததுசுவணம் பூவிலுயர்ந் ததுபதுமம் புலன் வென்றோர்க
ண்முன்னிலுயர்ந் ததுநீவி ராயதுபோற் பேதையெமை முழுதுங் கல்வி
தன்னிலுயர்ந் திடவருள்வீர் மஆதுலெப்பை யாலிமெனுந் தவவுள்ளீரே.

ஆவருமை வளப்பவரு மமுதருமை புசிப்பவரு மலர்ந்தவர்சப்
பூவருமை யணிபவரும் பொன்னருமை யீட்டுவரும் புலவர்பாடும்
பாவருமை சற்பவரு மறிவாது போலாய்ந்து பார்க்கப்போங்கால்
யாவருமை யறியார்கொல் மஆதுலெப்பை யாலிமெனு மழகுள்ளீரே.

நல்லிசைவாய்ந் திலகினிய கவிக்குதவா வுலத்தர்களை நயந்தோதாமற்
பல்லிசையோங் குமதுபய பதத்திசையு மிதத்திசையும் பரிவாய்நுங்கோ
யில்லிசையு மியலிசையுஞ் செயலிசையும் பெருமிதமுற் றிருக்குமூதூர்
தொல்லிசையும் பாடவருண் மஆதுலெப்பை யாலிமெனுஞ் சுகவுள்ளீரே.

அறுகுநுனி பனியனைய சிறியதொரிந் திரியவித்தங் கதனுற்பிண்டத்
துறுங்கழிங் கிதமொடுபண் டொருகவிதை யுரைத்தொருவர்க்குதவவன்னார்
பெறுமலடு தொலையவரம் புரிந்ததொப்பக் குலநலனும் பிறங்கவெற்கோர்
குறுகலிலா தருள்கொடுப்பீர் மஆதுலெப்பையாலிமெனுங்கொடைவல்லீரே

முடிதாங்கு நுங்கோயிற் பண்டுபணி யியற்றியவிம் மூதூர்வாழ்க்கை
படிதாங்கு யத்தாயி மரைக்காயர்க் குவப்பொடுநற் பலனீந்தாண்ட
கடிதாங்கு நுங்கமல வடிதாங்கு மடியன்மிடி களைந்தெஞ்ஞான்று
நடிதாங்கும் படியருள்வீர் மஆதுலெப்பை யாலிமெனு நாவல்லீரே.

நிதமமர் பாவிநிற்த நுந்திருவா லயத்தையிவ ணிகரொன்றில்லா
விதமலர்மாப் பணியியற்று மிப்பிறைசை பெரியதம்பி வினைநீத்தன்பா
யிதமலிநல் லருளருளுந் தெருளீரிப் பாப்பணிசெய் யெமக்குஞ்செல்வ
பாதமலர் தந் தாண்டருள்வீர் மஆதுலெப்பை யாலிமெனும் பகழுள்ளீரே.

மணமருவி மெய்ஞ்ஞான வழிமருவிச் சரிதைநிலை மருவிச்சாந்தக்
குணமருவி யாலிமொலி காமிலெனப் பெயர்மருவிக் குலவிமேலோர்
கணமருவி நிலவுநும தரியதவத்தியல்பெவரோ கழலற்பாலார்
திணமருவிங் கிதமுடைய மஆதுலெப்பை யாலிமெனுஞ் சிறப்புள்ளீரே.

பூப்பாடு மாண்டகைநு மாண்டகைசீர் சிறிதெடுத்துப் புகழ்வோர்ஞான்று
மீப்பாடு மிசையருளுந் தெருளாயு ளும்வளர்ந்து மிளிர்வதாய்த்திப்
பாப்பாடு நுமதடிமை யப்துலஜீ ஜய்ய திருப்பதச்சீர் நல்கிக் காப்
பாப்பாடு மதுபுரிவீர் மஆதுலெப்பை யாலிமெனுங் கலைவல்லீரே.

இஃது

சேலம்

## கலறத்து மஷாயிகுசாகிபு ஒலியுல்லா அவர்கள் பேரில்

# தோத்திரப்பா.

சீரார்ஞான மணிவிளக்கே திகழ்ரஞ் சிதமே புகழமுதே
பேரார் பிறைசை நகரொளியே பெம்மான் ஜெயினுலாபுத்தீன்
நேரார் கண்ணி னுண்மணியே நீவிருவந்திங் கெனைப்புரப்பீர்
காரார் பொழில்சூழெழில்சேலங் கவினு மஷாயிகொலி யரசே.

மாவா ரொலியெம் மஆதுலெப்பை மன்னவரர்க்கோர் முன்னவரே
பாவார் வண்ணக் களஞ்சியந்தம் பதநோ யொழித்திங் கிதமளித்த
மூவா தலர்செங் கதிரேநீர் முழுது முவந்திங் கெனைப்புரப்பீர்
பூவார் தடஞ்சாலணி சேலம்பொலியு மஷாயிகொலி யரசே.

கனத்திற் சனித்த நவநிதியே கருணைக்கடலே கண்டேநல்
லினத்திற் சனித்த மணத்தரும்பே யினியகனியே கரும்பேவிற்
பனத்திற் சனித்த மணியேபசீர் பாடவரமீந் தெனைப்புரப்பீர்
தனத்திற் சனித்த சேலமிசை தழைக்குமஷாயி கொலியரசே.

மதிக்கும்பருவஞ் சிறிதிலில்லம் மறந்து துறந்து சிறந்தவ
முதிக்கு நினைவதலர்ந்துபரத் துண்மை நிலையாய்ந் தகமியசீர்
கதிக்கும் படியற் புதம்படைத்த கண்ணே வுவந்திங் கெனைப்புரப்பீர்
துதிக்கும் வளமார் பதிசேலந் துலங்குமஷாயி கொலியரசே.

செல்லார் கவிகை நபிநயினூர் திருவாரணத்தின் பொருள்பழுத்த
சொல்லா ரினியகவிமாரி சொரியு முகிலே யறிவேதுங்
கல்லாக் கயவ னெனப்புரம்பேகணியா துவந்திங் கெனைப்புரப்பீர்
வில்லார் மாடமலர்சேலம் மிளிரு மஷாயிகொலி யரசே.

நிலைவாய்ந் தறிவின்றி வாய்ந்து நிகரின்மோட்சப் பதம்வாய்ந்தி
சிலைவா யிருபுள் ளினத்துருவைத் தீட்டி யவைக்காவியு மூட்டி
யலைவாய்நடந்த பெருமிதத்தீ ரன்பீருவந் திங்கெனைப் புரப்பீர்
தலைவாய்ந் தொளிரு நகர்சேலத் தருவேமஷாயி கொலியரசே.

துகடீ ரறபா ரியந்தமிழாய்த் தொன்னற்புலவ ரறிஞர்கலை
மகடோய்க் கழகக் கல்லூரிவதிய முனமெம் பதிசமைத்த
பகடோங் கறத்தீ ரவைநிகர்விற்பனச்சீர் கொடுத்திங் கெனைப்புகபீர்
முகடோங் கழகார் மனைச்சேலம் முதிருமஷாயி கொலியரசே.

கற்றோர்க் கிறையே வேதாந்தக் கதிரேமுகிர்கற் பகமேயெம்
பெற்றோர்களினு நற்றோற்றம் பெரிது முடையீரென வாஞ்சை
யுற்றோ துதற்கிங் கியைந்தீரன் புள்ளீர் தள்ளாதெனைப் புரப்பீர்
பொற்றோ யதிசீர் கமழ்சேலப் பொருளேமஷாயி கொலியரசே.

நலஞ்செய் மறைக ணான்கும்வழி நான்கு முணர்ந்தோர்க் கணிகலனாய்
பலஞ்செய் தவ்கீ தலங்கவிசைபலுக மொழிந்த நிலவேயைம்
புலஞ்செய் மாய்யை யகலவருள்புரிந்து பரிந்திங் கெனைப்புரப்பீர்
வலஞ்செய் வனைந்த தொருசேலம் வயங்குமஷாயி சொலியரசே.

குலவு தமிய ரிறைஞ்சிநிதங் கூறுமாற்றந் தெரிந்துநலம்
பலவுமளிக்கு முபகாரப் பண்பீர் கனிந்துள் ளன்பினோடு
நிலவு மகிமை யுணர்ந் ததபாய் நிகழ்த்துங் கவிகேட்டெனைப் புரப்பீர்
சொலவுன் னதமுற் றிருச்சேலஞ் சொலிக்குமஷாயி கொலியரசே.

புல்லிக் கெடுமும் மலத்தையிகல் புரியைம் புலத்தை மனக்குரங்கை
வெல்லுந் திறத்தை யென்னில்வரு விக்கஞானப் பக்குவத்தை
சொல்லுந் திருமந் திரம்பயிலுஞ் சூட்சம்பயிற்றி யெனைப்புரப்பீர்
கல்லு மொளிசெய் வளச்சேலங் களிக்கும்ஷாயி கொலியரசே.

ஆய வுயர்நும் மெய்ஞ்ஞான வரும்பாவமுதிற் சிறிதுண்போர்
தூய நெறிமா தவங்கலந்து சுகுணப்பேற்றைப் பெருவதென்றால்
பாயுங் கருணை நிரம்பினர்சீர் பகரற்பாற்றோ வெனைப்புரப்பீர்
தாயிற் சிறந்து சேலமதிற் தழைக்குமஷாயி கொலியரசே.

நலம்பெற் றொளிசெய் மெய்ஞ்ஞான நடைகற் றொழுகாருறவதனாற்
றுலமுற் றினிதா ரகசியத்தின் சூட்சமுணரா தங்கிங்கென்
றலம்பு நினைவ தோர்நிலைக்கு ளாக்குந்திறந்தந் தெனைப்புரப்பீர்
நிலமத் தனையு மதிசேல நிலவேமஷாயி கொலியரசே.

கள்ளப் பொறியைந் தவித்துமலக் களிம்பூற் றதையுந்துடைத்துநிலைத்
துள்ளப்பொருட னுண்மையறிந் துய்ய வொருமெய் யுபதேச
முள்ளமினிக்க கருணைவெள்ள மொழுக வுரைத்திங் கெனைப்புரப்பீர்
வள்ளற் பெருமா னெனசேலம் வளருமஷாயி கொலியரசே.

ஆகும்பொழுதே திவண்கொணர்ந்தோ மந்தோதனித்து வந்த தொப்ப
போகும்பெழுதே துடனெடுத்துப் போவதென வாய்ந் தொழுகாத
மேகர்க்கறிவு பயிற்றிடுநன் முத்தே நித்யமெனைப் புரப்பீர்
வாகுற்றிலகும் பொற்சேல மதியே மஷாயி கொலியரசே.

இருமா நிலஞ்செய் யிடருமகத் திருளுங்களைந்து தனையறிந்தோ
ரருமாதவத்தோ ரிவர்க்குமுய ரணிபார் நுந்தம் பணிபுரியத்
திருமாண் பியல தளித்துவிழி திறந்தா சொழித்திங் கெனைப்புரப்பீர்
பெருமானியே தனிச்சேலம் பிறங்கு மஷாயி கொலியரசே.

அந்த முதலற் றுயிர்க்குயிரா யருவு முருவுங்கடந் தொன்றாய்
வந்தமுத லவனிவன் கருணைவதி யெம்பதிவாய்ச் சனித்ததனுற்
சொந்தமனம் தம்பாராட்டிச் சொலுவாங் கேட்டிங் கெனைப்புரப்பீர்
சந்தமுதிருந் திருச்சேலக் கதிரே மஷாயிகொலி யரசே.

ஞாலமதிக்கு மதிசயத்தீர் நாயேன் கனிவா லோயாதிங்
கோலமதிக மிடுவதைகேட் டுள்ளங் களித்து விழித்துதிருக்
கோல மதிநேர் முகத்தைமனங் குளிரக்காட்டி யெனைப் புரப்பீர்
சீலமதிலோங் கியசேலஞ் சிறக்கு மஷாயி கொலியரசே.

நாவுந் தழும்பேறிட முகமு நனையவழுது நினைந் தும்மைக்
கூவியழைப்ப தறிந்துமனக் கோட்ட மனைத்து மோட்டி நிதந்
தாவுமுலக பாசவனற் றன்னையவித்துங் கெனைப் புரப்பீர்
கூவுக்கிறை யாய்ச்சேலமிசை குலவு மஷாயிகொலி யரசே.

நாட்டும்புகழீ ரப்துலஜீஜ் நவிலுங் கவிநஞ் செவியாரக்
கேட்டுமுவந்தா தரித் திரங்கி கேதமொடுநோய் தீதெவையு
மோட்டுமுபய பதத்தபய முதவிநிதமிங் கெனைப் புரப்பீர்
நீட்டுந் தகுதிபெறுஞ் சேலந் திகழுமஷாயி கொலியரசே.

முற்றிற்று.

இ ஃ து

பிறையாறு

கலறத்து சின்னலெப்பையாலிமொலியுல்லா

அவர்கள் பேரில்

# தோத்திரப்பா.

நூல்.

துதியு மாண்புந் துலங்க வகித்துநன்
னிதியு ஞான நெறியு நிமிர்ந்திடர்
சதியுந் தீதாந் தவிர் பிறையாறதில்
வதியுஞ் சின்ன லெப்பை வலியாலீமே. 1

நவங் கலந்த நமதுது மான்றிருத்
தவங் கலந்த தயைமணியே யெமை
யவங் கலந்திடா தாள்பிறை யாறதில்
சிவங் கலந்த சின்னலெப்பை யாலிமே. 2

கதியே செல்வக் களிப்பே கருணையு
ததியே துன்டாங் தவிர் மருந்தேநவ
நீதியே வாகை நிமிர் பிறையாறதின்
மதியே சின்ன லெப்பை மறையாலிமே. 3

கருவே சோதிக் கதிரே கவினுமைந்
தருவே யின்பந் தருமமுதே யெமர்
குருவே கோவே குணிப் பிறையாறதின்
மருவே சின்ன லெப்பை மதியாலிமே. 4

வானமேத்த வருமொலி யாலிம்க
வானவர்க்கு மரும்புக ழெய்தி மெய்ஞ்
ஞானமேமென நற்பிறை யாறதின்
மானமார் சின்ன லெப்பை மன்னாலிமே. 5

நாளுந் தீதுநலிய வலிய நுந்
தாளி னன்னிழல் சார்பினில் வைத்தெமை
யாளு தீரினி தாய் பிறை யாறதில்
வாழுஞ் சின்ன லெப்பை வலியாலிமே. 6

அளக்கரும்புக ழாரணப் பாகை புண்
டுளக் கசட்டை யொழுக்கு ஹதீ தினை
விளக்கு வேந்தென விட்பிறை யாறதிற்
றுளக்கு சின்ன லெப்பை துரையாலிமே. 7

நேருந் துன்னு நெறிநவந் துன்னுநும்
பேருந் துன்னப் பெறுகுற வஞ்சியால்
சீருந் துன்னுந் திருப்பிறை யாறதி
லாருந் துன்னுஞ் சின்ன லெப்பையாலிமே. 8

அறமருத்தம் வீடன்னைப் யளிக்கு நற்
றிறமிகுமுப தேச வலங் கிர்த
முறை தெளிந்து முதுப்பிறை யாறதில்
பிறங்கு சின்ன லெப்பை பெயராலிமே. 9

சுமக்கும் பாபச் சுமைப்பழு வற்றுய
வெமக்கு நல்லுப தேசமொன் றிங்குவோ
திமக்குன் றொத்தெழு மிற்பிறை யாறதிற்
கமக்குணச் சின்ன லெப்பை கண்ணலிமே. 10

பிணியி லம்பாடு பேயின முமகற்
றணிகெ ழும்பதத் தன்பளித் தாளுதீர்
தணிவிலா தெழில் சால்பிறை யாறதின்
மணியே சின்ன லெமப்பை தியாலிமே. 11

புல்மறுக் தனர் பூரியர் சீரியர்
மலமறுக் தனர் மாமறை வல்லுனர்
சலமறுக் தனர் தம்பிறை யாறதி
லலமறுத்த சின்ன லெப்பை யாலிமே. 12

நலஞ்செய் தங்குற வஞ்சிளை நங்கைமார்
பொலஞ்செய் யூசற் புரியசைத் தோதலால்
புலஞ்செய் ஞானம் பொலிப்பிறை யாறதில்
வலஞ்செய் சின்ன லெப்பை வலியாலிமே. 13

அஞ்சி தத்தினு மங்கிளர் நங்குற
வஞ்சி கற்கு மகத்துவர் வாழ்தலே
மிஞ்சி நாளு மிளிர்பிறை யாறதின்
மஞ்சித சின்ன லெப்பை மன்னுலிமே. 14

நொந்து வந்து நிவலெளி யோரையு
வந்து நித்தம் வதிய நிதியரு
டந்து காக்குந் தனிப்பிறை யாறதி
லிந்துநேர் சின்ன லெப்பை யெம்மாலிமே. 15

நயங் குதிக்கு மெய்ஞ்ஞான வியலெமி
தயங் குதிக்க தருதீர னுதினஞ்
செயங் குதிக்க செழும்பிறை யாறதில்
வயங்கு சின்ன லெப்பை வலியாலிமே. 16

மெய்விடாத வியன் றவத் தீரமை
கைவிடா திவண் காப்ப தும்பாரமே
செய்விடா வளஞ் சேர்பிறை யாறதி
னைவிடாச் சின்ன லெப்பை யன்பாலிமே. 17

குறைவிலா தவக்கோனே நஞ் சீர்சில
தறையு மப்து லஜீஜாக் கருடின
நிறைய நல்குக நீள்பிறை யாறதி
லுறையுஞ் சின்ன லெப்பை பொலியாலிமே. 18

முற்றிற்று.

இந்நூலாசிரியரால் இயற்றி தற்போதச்சிடப்படும்

## நூற்களாவன.

1. மக்கேசர் பதிற்றந்தாதி
2. தரங்கையந்தாதி.
3. கிள்ளை நான்மணிமாலை.
4. ஷை பதிகம்.
5. குட்டிமலை சாகிபு பதிகம்.
6. மதுமூதுபந்தர் வழிநடைச்சிந்து.
7. தல்பாதல் சாஹிபு பாமாலை.
8 காட்டானைசெய்கப்துல்காதிரொலி தோத்திரமாலை
9. திருமங்கலக்குடி பதிகம்.
10. ஷை அந்தாதி.

இங்ஙனம்,

கா. [illegible]